**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 74** **நாள்: 04.02.2026**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், அடையாறு மண்டல த்தில் ரூ.40.42 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினைத் திறந்து வைத்து, ரூ.12.04 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (04.02.2026) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-170க்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். அவ்வாறாக, அடையாறு மண்டலம், பள்ளிப்பட்டு பிரதான சாலையில் மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, ரூ.40.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பள்ளிப்பட்டு பிரதான சாலையில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் உடற்பயிற்சிக் கூடத்திற்கும், ரூ.22.90 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி மண்டபம் சாலை, அண்ணா நூற்றாண்டு நூலகம் எதிரில், பயணியர் நிழற்குடை அமைக்கும் பணியினையும் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், பொன்னியம்மன் கோவில் தெரு, அம்பாடி தெரு, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு, கோட்டூர் கார்டன் 4வது பிரதான சாலை விரிவு, நாயுடு தெரு, புது தெரு உள்ளிட்ட தெருக்களில் ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் 7.77 கி.மீ. நீளத்தில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும், ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் கோட்டூர்புரம் முதல் பிரதான சாலை, சூர்யா நகர், ராஜீவ் காந்தி அவென்யூ, பாரதி அவென்யூ, குருவப்பன் தெரு, சர்தார் பட்டேல் சால, கோட்டூர் 4வது பிரதான சாலை விரிவு, லாக் தெரு சந்திப்பு உள்ளிட்ட பிரதான சாலைகளில் 5.71 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, சித்ரா நகர், சென்னை தொடக்கப் பள்ளியில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடப் பணியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் திரு. செந்தில் குமரன், மாமன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**